தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை.600 006
ந.க.எண். 27979/ஜே2 / 2013 நாள்30.11.2013
ஸ்ரீ விஜய, கார்த்திகை 17, திருவள்ளுவர் ஆண்டு 2044

---

பொருள் .. தொடக்கக் கல்வி – இந்திய செஞ்சிலுவைச் சங்கம் – நடுநிலைப்பள்ளிகளில் தொடங்குதல் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்து.

பார்வை .. இந்திய செஞ்சிலுவைச் சங்க தமிழ்நாடு கிளையின் கடிதம் எண். ஏ/13/ஜேஆர்சி/2013, நாள் 4.10.2013.

----

பார்வையில் காணும் இந்திய செஞ்சிலுவைச் சங்க செயலாளர், சென்னை.8 என்பாரிடமிருந்து பெறப்பட்ட கடிதத்தில் தமிழகத்தில் இளம் செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், ஒருசில நடுநிலைப்பள்ளிகளில் மட்டுமே இச்சங்கத்தின செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், தமிழகத்தின் பல நடுநிலைப் பள்ளிகளில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தொடங்கப்படவில்லை எனவும், இந்நிலை மாறி தமிழகத்தில் உள்ள அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

எனவே, அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மூலமாக நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு மேற்காண் பொருள் சார்ந்து சுற்றறிக்கை அனுப்பி செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்கள் பற்றி மாணவர்களிடையே எடுத்துக்கூறி ஆர்வமூட்டுவதுடன் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் ஆலோசகர்கள் ஒத்துழைப்புடன் அனைத்து நடுநிலைப் பள்ளிகளிலும் செஞ்சிலுவைச் சங்கம் தொடங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.
30.11.13

பெறுநர்

அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

நகல்

இந்திய செஞ்சிலுவைச் சங்கம்,
தமிழ்நாடு கிளை
“Red Cross Building”
எண்.32, மாண்டியத்ரோடு,
எழும்பூர், சென்னை–600 008.

D:\J sec-2013\December 2013 J sec.docx